# Deposition of Witness
## (Chapter XXXIII Code of Criminal Procedure)
## In the Court of Judicial Magistrate No.II Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No. 76/2025 |
| Police station | : | Cuddalore DCB PS |
| Deposition of witness for Prosecution | : | L.w.1/P.W.1 |
| Name | : | அல்லி @ தனஞானேஸ்வரி |
| Father Name/Husband Name | : | ராஜதுரை |
| Village | : | கடலூர் |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 04.06.2025 நாளாகிய இன்று திரு.R.Buvaneshkumar, B.A, L.L.B(Hons), L.L.M., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**(எதிரி ஆஜர் இல்லை எதிரி தரப்பில் குவிமுச 317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

நான் புதுப்பாளையத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் இல்லாத எதிரியை தெரியும். எனது தெருவில் இருந்து 2 தெரு தள்ளி நபிகள் நாயகம் தெருவில் குடியிருக்கும் மாலா (எ) பத்மினியிடம் கடந்த 2021 ம் ஆண்டு ரூ.66,000/- சீட்டுகள் 2 அவரிடம் மாத தவணை முறையில் முழுவதுமாக கட்டி முடித்து விட்டேன். அதில் நான் ஒரு சீட்டும் தம்பி மணிகண்டன் ஒரு சீட்டும் கட்டினேன். அதை போலவே எனக்கும் என் தம்பிக்கும் சேர்த்து 2022 ம் வருடம் ரூ.60,000/- சீட்டுகள் 2 மாத தவணையாக கட்டிய தொகை மொத்தம் ரூ.24,760 ஆகும். 02.05.2022 ல் எனக்கும் என் தம்பிக்கும் சேர்த்து ரூ1,00,000/- சீட்டுகள் 2 கட்டினேன். அதில் கட்டிய மொத்த தொகை ரூ1,18,000/-.

**முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**